2024 ஜூன் 29]

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** . . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன கொடுத்தீர்களோ அதைப் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

(அஈ) நாகப்பட்டினம், C.P.C.L. நிறுவனத்திற்கு நிலம் வழங்கியோருக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மிதிவண்டிகளின் தரம் குறித்த பத்திரிகை செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் CPCL விரிவாக்கத்திற்கான நிலம் எடுக்கப்படுவதில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மறுவாழ்வு மீள்குடியமர்வு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.*

அதோடு, இன்றைக்குப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மிதிவண்டிகள் தரம் குறித்து எதிர்மறையான செய்தி பத்திரிகையில் வந்துள்ளது. அதுகுறித்தும் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(எ) மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மறுவாழ்வு, சிறப்புக் குழு அமைத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்களின் உரிமை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*